# உலக கொரியா

THE ACADEMY OF
KOREAN STUDIES

# பொருளடக்கம்


1. அறிமுகம்
2. கொரிய வரலாறு
3. பொருளாதார வளர்ச்சி
4. மலர்ந்த ஜனநாயகம்
5. உலக அரங்கில் தென் கொரியா

# 1. அறிமுகம்

கொரியக்குடியரசு (தென் கொரியா) கொரியத்தீபகற்பத்தின் தென்பகுதியில் உள்ள நாடாகும். கொரியாவின் மேற்குப் பகுதியில் மஞ்சள் கடலுக்கப்பால் சீனாவும், கிழக்குப் பகுதியில் கிழக்கு கடலுக்கு அப்பால் ஜப்பானும், தீபகற்பத்தின் வடக்குப் பகுதியில் கொரிய ஜனநாயக மக்கள் குடியரசும் (வட கொரியா) அமைந்துள்ளது.

## பொது தகவல்கள்

- அதிகாரப்பூர்வ பெயர் : கொரியக்குடியரசு
- 38°N & 33°N அட்சரேகை &126°E தீர்க்கரேகை
- நிலப்பரப்பு : 100,266 கிமீ $^{2}$ (2013)
- தலைநகர் : சியோல் (9,926,000) (2013)
- மக்கள்தொகை : 50,220,000 (2013)
- மக்கள் அடர்த்தி : 501 மக்கள்/ கிமீ $^{2}$ (2013)
- மொழி : கொரியன் (எழுத்துமுறை: ஹான்குல்)
- சமயம் : பௌத்தர்கள் (22.8%), பிராட்டஸ்டன்ட் (18.3%), கத்தோலிக்கர் (10.9%), மற்றவர்கள் (1.1%), எதையும் சேராதவர்கள் (46.9%)
- அரசாங்கம் : ஜனாதிபதி (குடியரசு)
- சராசரி வெப்பநிலை : -2.5℃ (ஜனவரி) to 25.4℃ (ஆகஸ்ட்)
- தேசியக்கொடி : தேகுக்கி
- தேசியமலர் : முகுங்குவா (ரோஸ் ஆப் சரோன்)

## பொருளாதாரம்

- மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ.உ.உ) GDP : 1,417 பில்லியன் அ.டா* (2014)
- மொ.உ.உ தலைவிகிதம் : 28,101 அ.டா (2014)
- மொ.உ.உ (பொருள் வாங்குதிறன் சமநிலை, PPP) :1,779 பில்லியன் அ.டா (2014)
- மொ.உ.உ தலைவிகிதம்(பொ.வா.ச) : 35,277 அ.டா (2014)
- மொத்த தேசிய வருமானம் (மொ.தே.வ, GNI) : 1,366 பில்லியன் அ.டா (2014)
- மொ.தே.வ தலைவிகிதம் : 27,090 அ.டா (2014)

- மொ.தே.வ (பொ.வா.ச) : 1,746 பில்லியன் அ.டா (2014)
- மொ.தே.வ தலைவிகிதம் (பொ.வா.ச) : 33,620 அ.டா (2014)
- ஏற்றுமதி : 573 பில்லியன் அ.டா (2014)
- இறக்குமதி : 526 பில்லியன் அ.டா (2014)
- ஜினி குறியீடு : 31.1 (2011)
- மனித அபிவிருத்தி சுட்டெண் (HDI) : 0.891 (15th) (2013)
- முக்கிய தொழில்துறை தயாரிப்புகள் : குறைகடத்திகள், தானுந்து வாகனங்கள், கப்பல்கட்டுமானம், நுகர்வோர் மின்னணுவியல் சாதனங்கள், அலைபேசி தொலைதொடர்பு சாதனங்கள் மற்றும் உருக்குப் பொருட்கள்
- நாணயம் : உவான் (KRW, கொரிய குடியரசு உவான்) (1 அ.டா = 1,060 உவான்) (2014)

## 2. கொரிய வரலாறு

### ஆரம்பகால வரலாறு

பழைய கற்காலம் தொட்டே கொரியத்தீபகற்பத்தில் மக்கள் வாழ்ந்து வந்த போதிலும், முதல் கொரிய இராஜ்ஜியமான "கோ-ஜோசன்" வெண்கலக்காலத்தின் போது நிறுவப்பட்டது. இன்றளவும் கோ-ஜோசனை உருவாக்கிய "தான்குன்"-னை "தாதா தான்குன்" என்றே கொரியர்கள் அழைக்கிறார்கள். பண்டைய புராணங்களின்படி சொர்க்கலோகத்தின் ராஜகுமாரனான "ஹ்வாநுங்" பூமியில் வந்து வாழ்ந்துவந்தார். ராஜகுமாரர் "ஹ்வாநுங்"-னின் ஆசியுடன் கரடியாய் இருந்து பெண்ணாக மாறியவர் "தான்குன்"-னை பெற்றெடுத்ததாகவும், அதன் பின்னர் "தான்குன்"னால் உருவான "கோ-ஜோசன்" இராஜ்ஜியம் கொரியத்தீபகற்பத்தின் வடபகுதி, மஞ்சூரியாவின் பலபகுதிகள் வரை விரிவடைந்தது. சீரும் சிறப்புமாக நடைபெற்று வந்த "கோ-ஜோசன்" மன்னர்களின் ஆட்சி கி.மு. 108-ல் சீனாவின் ஹான் வம்சத்தின் குறிக்கீட்டால் முடிவுக்கு வந்தது.

### கொரியாவின் மூவேந்தர்கள்

கொரியத்தீபகற்பத்தின் வெவ்வேறு பகுதிகளை கி.மு 1 முதல் கி.பி 7-ம் நூற்றாண்டு வரை மூன்று இராஜவம்சங்கள் (பேக்ஜே, சில்லா மற்றும் கொகுரியோ) தனித்தனியே ஆட்சி செய்துவந்தார்கள். தீபகற்பத்தினை முழுதாக கைப்பற்ற அவர்கள் தங்களுக்குள் அடிக்கடி போரிட்டுக்கொண்டார்கள். அதன்பின் கி.பி. 676-ல் வடக்கிலிருந்த கொகுரியோ, தென்மேற்கிலிருந்த பேக்ஜே, தென்கிழக்கேயிருந்த சில்லா எனச் சிதறிக்கிடந்த மூன்று அரசுகளும் இணைக்கப்பட்டு ஒன்றுபடுத்தப்பட்ட சில்லா வம்சமாக உருவாக்கப்பட்டது. அதன்பின் கொரியத்தீபகற்பம் கலை மற்றும் அறிவியல் துறைகளில் தலைசிறந்து விளங்கியது, இன்னும் குறிப்பாக பௌத்தம், கட்டடக்கலை, வானியல், விவசாயம் மற்றும் இலக்கிய துறைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களையும் பெற்றது. பத்தாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை வளர்ச்சியின் பாதையில் அமைதியாக சென்று கொண்டிருந்த ஒருங்கிணைந்த சில்லா அரசு புதிதாக உருவான கொரியோ வம்சத்தால் கி.பி.935-ல் வீழ்ந்துபோனது.

## *கொரியாவில் மதங்கள்*

பௌத்தம் கி.பி. 372-ல் அண்டை நாடான சீனா வழியாக கொரியாவிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. கொரியாவிற்கு வந்த கொஞ்சகாலத்தில் கொரியர்களின் மனப்போக்கு, கலாச்சாரம் மற்றும் ஆன்மீக வாழ்க்கையில் அகற்றமுடியா இடத்தை பிடித்து வியாபித்துப்போனது. மூவேந்தர்கள் ராஜ்ஜிய காலம்தொட்டு கொரியோ ராஜ்ஜியம் வரை பௌத்தம் அரசு மதமாக இருந்தது. அதன்பின் வந்த ஜோசன் வம்சம் (1392-1910) கன்பூசியஸ் நெறியை ஆட்சி அமைப்பில் கொண்டு வந்தது.

கத்தோலிய மதம் 18-ம் நூற்றாண்டின் பின்பகுதியிலும், பிராட்டஸ்டன்ட் மதம் 19-ம் நூற்றாண்டின் பின்பகுதியிலும் கொரியத்தீபகற்பத்திக்கு வந்தது. உள்ளே வந்த மதங்களை அரசு ஒடுக்க நினைத்தது, ஆனால் எண்ணற்ற மக்கள் பின்பற்றிய காரணத்தால் 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் 20-ம் நூற்றாண்டின் தொடக்கம்வரை தீபகற்பத்தில் இந்த மதங்கள் பெரிய அளவில் விரிவடைந்தது. தற்போதைய நிலவரப்படி ஏறக்குறைய 30 சதவித மக்கள் கிறித்துவமதத்தை பின்பற்றுகிறார்கள். ஆயினும், நவீன கொரியாவில் இன்னும் பௌத்தமதம் புகழ் பெற்றுள்ளது. இன்றைய கொரியாவின் அன்றாட பணி மற்றும் நடைமுறை வாழ்க்கைமுறைகளில் கன்பூசியஸ் தத்துவதின் தழுவலை காணமுடிகிறது. இஸ்லாம் மற்றும் இன்னும் பிற மதங்களும் சுதந்திரமாக மக்களால் பின்பற்றப்படுகிறது.

## கொரியோ மற்றும் ஜோசன் வம்சங்கள்

### < கொரியோ வம்சம் >

கி.பி. 935-ல் சில்லா அரசை வீழ்த்தி ஆட்சிக்கு வந்த கொரியோ வம்சமும் பௌத்தத்தையே அரசு மதமாக போதித்து. கொரியோ ஆட்சி காலத்தில் பல சிறந்த கலைநயம் படைத்த படைப்புகள் உருவாக்கப்பட்டன. கொரியோ மன்னர்கள் வெளிப்படையான வெளியுறவுக் கொள்கையை கடைபிடித்த காரணத்தால் வெளிநாட்டினர் கொரியத்தீபகற்பத்தினை “கொரியா” என்ற பெயரில் அடையாளம் காணத்தொடங்கினர். 14-வது நூற்றாண்டின் பிற்பகுதியில் உருவான ஜோசன் வம்சத்தினால் ஏறத்தாழ 470 ஆண்டுகள் ஆட்சி புரிந்த கொரியோ வம்சத்தின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

## *திரிட்பிதகா கொரியான*

“திரிட்பதகா கொரியான” என்பது உலகிலேயே மிக விரிவான பௌத்தமத கோட்பாடுகள் பொதியப்பட்ட புனிதத்தொகுப்பாகும். 13-ம் நூற்றாண்டில் மங்கோலியர்களின் ஆக்கிரமப்பில் இருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள புத்தரிடம் பிரார்த்திக்கவேண்டி மிகநுணுக்கமான முறையில் 81,258 மரக்கட்டைகளில் பௌத்தமத கோட்பாடுகள் பதியப்பட்டன. ஒவ்வொரு கட்டையின் ஒவ்வொரு பக்கத்திலும் சுமார் 320 பாரம்பரிய சீன எழுத்துகளை கொண்டு உருவாக்கப்பட்டது. மொத்தமாக ஐந்து கோடியே இருபது இலட்சம் பாரம்பரிய சீன எழுத்துக்கள் மிக உன்னிப்பான முறையில் கட்டையில் செதுக்கப்பட்டு உள்ளது. முழு தொகுப்பில் எந்த ஒரு பிழையும் இல்லையென்பதுதான் ஒரு வியத்தகு செய்தி.

## < ஜிக்ஜி >

“மிகச்சிறந்த பௌத்தகுருக்களின் ஜென்போதனைகளின் தொகுப்பு” எனும் ஒப்பற்ற படைப்பின் தலைப்புச்சுருக்கமே ஜிக்ஜி. இந்த அற்புதபடைப்பு கொரியோ அரசின் ஆட்சிகாலத்தில் 1377-ம் வருடத்தில் ஹுங்தொக் பௌத்த கோவிலில் உருவாகப்பட்டது. அசையும் உலோகவகை அச்சுமுறையை கொண்டு அச்சிடப்பட்டுள்ள உலகின் புராதன புத்தகமாக ஜிக்ஜி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 1450-ம் ஆண்டு வாக்கில் யோகான்னசு கூட்டன்பர்கு அவர்கள் நவீன அச்சு முறையை பயன்படுத்தி ஒவ்வொரு பக்கத்திலும் 42 வரிகள் கொண்ட உலகின் முதல் விவிலியம் புத்தகத்தை வெளியிட்டது ஜிக்ஜி படைக்கப்பட்டு 78 ஆண்டுகளுக்கு பின்வந்தது என்பது குறிப்பிடத்தக்கது. ஜிக்ஜி தற்போது பிரான்சு தேசிய நூலகத்தின் கிழக்கித்திய கையெழுத்துப்பிரதிகள் பிரிவில் பாதுகாப்பாய் வைக்கப்பட்டுள்ளது. 2001-ம் ஆண்டில் யுனஸ்கோவின் “மெமோரி ஆப் த வோல்ட்” என்ற திட்டத்தின் கீழ் ஜிக்ஜி இணைக்கப்பட்டு அதன் சிறப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## < ஜோசன் வம்சம் >

ஜெனரல் “இ சொங் கே” என்பவரால் ஹன்யாங்-ஐ (தற்போதைய சியோல்) தலைநகரமாகக்கொண்டு ஜோசன் வம்சம் 1392-ல் நிறுவப்பட்டது. 518 ஆண்டுகள் நடந்த ஜோசன் மன்னர்களின் இராஜ்ஜியம் 1910-ல் ஜப்பான் ஆக்கிரமிப்புக்குபின் முடிவுக்கு வந்தது. ஜோசன் மன்னர்கள் கன்பூசியஸ்

நெறிமுறைகளை ஆட்சி கொள்கையாக கொண்டு கொரியாவை ஆண்டார்கள். ஒழுக்கம் மற்றும் நடத்தை முறைகளின் அடிப்படையில் சமுதாயம் பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டது. அரசு நடத்திய தேர்வுகளில் பங்குகொண்ட மக்களின் செயல்திறன் அடிப்படையில் அரசு அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டார்கள். ஜோசன் வம்சத்தின் நடுத்தர ஆட்சி ஆண்டுகளில், இருமுறை ஜப்பானியர்களாலும் பின்னர் மங்கோலியார்களாலும் கொரியா பேருவீழ்ச்சி அடைந்தது. வம்சத்தின் பிற்பாதியில், கொரியா விவசாய தொழில்நுட்பங்களில் மிகச்சிறந்த அளவில் முன்னேற்றம் கண்டது, அதன்பின் வணிக நடவடிக்கைகளிலும் மலர்ச்சி பெற்றது. 18-ம் நூற்றாண்டில் அரசியல் நிலைப்புத்தன்மை ஏற்பட்டபோதிலும், அதன்பின் பல வெளிப்புற சவால்கள் மற்றும் சர்வதேச அதிகார போரட்டங்களின் மத்தியில் சிக்கிக்கொண்டு 20-வது நூற்றாண்டின் தொடக்கத்தில் கொரியா கடுமையான அளவில் அவதியுற்றது.

## *கொரிய எழுத்துமுறை - ஹான்குல்*

கொரியவரலாற்றில் மிகச்சிறந்த மன்னராக ஜோசான் இராஜவம்சத்தின் மாமன்னர் சேஜோங் (1418–1450) கருதப்படுகிறார். அவர் “ஜிப் ஹ்யொன் ஜொன்” எனும் அரசு ஆராய்ச்சி நிறுவனத்தின் உதவியுடன் ஹான்குல் எனும் கொரிய எழுத்துமுறையை 1443-ம் ஆண்டு உருவாக்கினார். இதன்வாயிலாக கொரியர்கள் பேச்சுவாக்கில் பேசிவந்த கொரிய மொழியை சீன எழுத்துக்கள் துணையின்றி ஹான்குல்-மூலம் எழுதிப்படித்தனர். அதன்பின் கல்வியியல் சார்ந்த பணிகளுக்கு சீன எழுத்துகள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டாலும், பெரும்பாலான இலக்கியங்கள் அனைவருக்கும் புரியும் வகையில் ஹான்குலில் எழுதப்பட்டன. உயிர் மற்றும் மெய் எழுத்துகளின் எழுத்துருக்கள் மிக துல்லியமாகவும், தர்க்கரீதியாகவும் இருக்கின்ற காரணத்தால், புதிதாக கொரிய மொழியைக் கற்றுக்கொள்பவர்கள் ஒரு சில மணிநேரத்தில் எளிதாக கற்றுக்கொள்ளமுடியும். இந்தக் காரணங்களால் ஹான்குல் அறிவியல் முறைப்படி உருவாக்கப்பட்ட உலகின் ஒரு தலைசிறந்த எழுத்துமுறையாக போற்றப்படுகிறது.

## *வரலாற்று சிறப்புமிக்க ஹாஹுவே மற்றும் யாங்தொங் கிராமங்கள்*

ஹாஹுவே மற்றும் யாங்தொங் கொரிய கிராமங்கள் இரண்டும் கடந்த ஐநூறு வருடங்களாக சந்ததி சந்ததியாய் வாழ்ந்துவந்த மக்களின் வாழ்கைமுறையினை வெளிக்காட்டும்படி உள்ள வரலாற்று சிறப்புமிக்க கிராமங்களாகும். கண்ணிற்கும் மனதிற்கும் இனிய அழகிய இயற்கை சூழ்நிலையில் உருவான இந்த கிராமங்கள்

கன்பூசியஸ் கோட்பாடுகளின்படி வாழ்ந்த குடும்பங்களின் வாழ்க்கை முறை மற்றும் பழக்க வழக்கங்களை சிறந்தமுறையில் பிரதிபலிக்கின்றன. இவைகள் மேன்மையான கொரியதேசத்தின் வரலாறு மற்றும் மரபுகளை உலகோருக்கு சொல்லும் ஆதாரங்கள். சிறப்புவாய்ந்த இந்த இரு கிராமங்களையும் யுனெஸ்கோ தங்களுடைய உலக பாரம்பரிய பட்டியலில் 2010-ம் ஆண்டு சேர்த்துள்ளது.

## தீபகற்பத்தின் பிளவு

### < மார்ச் 1 ஆர்ப்பாட்டம் >

நவீன சகாப்தத்தின் விடியல் அவ்வளவு எளிதாக கொரிய தீபகற்பத்திற்கு வரவில்லை. ஏகாதிபத்திய ஆசையின் காரணமாக 1910-ல் ஜப்பான் கொரியாவை ஆக்கிரமித்தது. இழந்த இறையான்மையை மீண்டும் பெறுவதற்கு கொரிய மக்கள் படாதபாடுபட்டனர். 1919-ம் ஆண்டு மார்ச் 1-ந் தேதி 33 முக்கிய கொரியத் தலைவர்கள் கையொப்பம் இட்டு கொரியாவின் சுதந்திர பிரகடனத்தை அறிவித்தனர். அதன்பின் ஜப்பானிய ஆக்கிரமிப்பிற்கு எதிராக தேசியசுதந்திர எழுச்சி ஏற்பட்டு, அரசியல் மற்றும் ஆயுதமேந்திய எதிர்ப்புப் போராட்டத்தை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் கொரியர்கள் வெளிப்படுத்தினர். இதைத்தொடர்ந்து சீனாவில் உள்ள சாங்காய் நகரில் கொரியக்குடியரசின் இடைக்கால அரசு உருவானது.

### < விடுதலையும் பிளவும் >

இரண்டாம் உலகபோரின் முடிவில் (1945 ஆகஸ்ட்) ஜப்பான் சரணடைந்ததால் கொரியத்தீபகற்பம் சுதந்திரக் காற்றை சுவாசித்தது. போரோயும் தருவாயில் மீதமுள்ள ஜப்பானிய வீரர்களை பிடிக்க ஐக்கிய அமெரிக்கா மற்றும் சோவியத் ஒன்றியத்திற்கும் ஏற்பட்ட பரந்த பனிப் போரினால் கொரியத்தீபகற்பம் 38-வது இணைக்கோட்டை மையமாக கொண்டு இரண்டாக பிரிக்கப்பட்டது. சுருக்கமாகச் சொல்லப்போனால், உலகின் மிகச்சக்தி வாய்ந்த வல்லரசுகளின் கைப்பிடியில் மாட்டிக்கொண்டு கொரியத்தீபகற்பம் நசுக்கப்பட்டது.

கொரியத்தீபகற்பதின் தென்பகுதியில் ஜனநாயகக் கோட்பாடுகள் மற்றும் கட்டற்ற சந்தைமுறைகளை கொண்ட கொரியக்குடியரசாக (தென் கொரியா)

1948-ம் ஆண்டு ஆகஸ்ட் 15ந் தேதி உருவானது. ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையில், தென் கொரிய மக்கள் தேர்தல் மூலம் நாட்டை ஆளும் தேசியசபையை தேர்ந்தெடுத்தார்கள். இந்தச் சபை அமெரிக்காவில் படித்து சுதந்திரப் போராட்டத்தில் பங்குபெற்ற தலைவரான முனைவர் “இ சுங் மான்”-யை தென்கொரியாவின் முதல் அதிபராக தேர்வு செய்தது.

இதற்கிடையில், சோவியத் ஒன்றியத்தின் ஆதரவு பெற்ற “கிம் இல் சுங்” தலைமையில் கொரிய ஜனநாயக மக்கள் குடியரசு (வடகொரியா) கொரியத்தீபகற்பதின் வடபகுதியில் உருவானது,.

இரகசிய அரசு ஆவணங்களில் உள்ள குறிப்புகளின்படி, சோவியத் ஒன்றியத்தின் துணைகொண்டு வடகொரியா ஜூன் 25, 1950-ல் தென்கொரியாவை ஆக்கிரமிக்க தொடங்கிய நிகழ்வு கொரிய யுத்ததின் தொடக்கமானது. இரு பகுதிகளுக்கு இடையே ஏற்பட்ட போர் விரைவில் ஒரு சர்வதேச மோதலாய் மாறிப்போனது.

மோதல் தொடங்கிய மூன்று நாட்களில் தலைநகர் சியோல் வடகொரியா வசமானது. ஆகஸ்ட் மாதத்தில் தென்கிழக்கு துறைமுக நகரமான பூசான் மற்றும் அதன் அருகிலுள்ள பகுதிகளை தவிர அனைத்து தென்கொரியப்பகுதிகளும் வடகொரியாவின் கைவசமானது.

இந்த நிலையில், ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை 21-க்கும் மேற்பட்ட உறுப்பு நாடுகளில் மூலமாக இராணுவ மற்றும் மருத்துவ பணியாளர்களை அனுப்பி தென் கொரியாவிற்கு உதவ முன்வந்தது. இதைத் தொடர்ந்து செப்டம்பர் 15-ல் இன்ஜொனில் ஜெனரல் டக்ளஸ் மக்கார்தர் தலைமையிலான படை, வடகொரியா ஆக்கிரமிப்பை எதிர்த்து நிலம் மற்றும் கடல் வழியாக இருமுனை தாக்குதலை தொடங்கியது. அதன்பின் தென் கொரியா மற்றும் அமெரிக்கா தலைமையிலான ஐ.நா.படைகள் வட கொரியாவை சீன எல்லை வரை துரத்தியது. சீன எல்லையை நெருங்கிய சமயத்தில் வட கொரியாவிற்கு ஆதரவாக போரில் நுழைந்த சீனா தென் கொரியா மற்றும் ஐ.நா.படைகளை தெற்கு நோக்கி பின் தள்ளியது. முன்னேறிய வடகொரியா படைகள் ஜனவரி 4, 1951-ல் மற்றொரு முறை தலைநகர் சியோலையை கைப்பற்றியது.

இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் தென்கொரியா மற்றும் ஐக்கிய நாடுகளின் படைகள், எதிரிப்படைகளுடன் போரிட்டு அவர்களை 38-வது இணைக்கோட்டு

எல்லைக்கு அப்பால் கொண்டுசென்றது, இந்த நிகழ்வின்போது இருதரப்பும் பெருத்த சேதத்தை சந்தித்தன. இந்த பேரழிவு யுத்தத்தால் பலத்த உயிர்சேதம் மட்டும் சமூககிளர்ச்சி ஏற்பட்டததோடு மட்டுமல்லாமல் தீபகற்பம் உடைந்து சிதறுண்டுபோனது. ஜப்பானிய காலனித்துவகாலத்தில் கூட அழியாமல் இருந்த உள்கட்டமைப்புகள் கொரிய போரினால் உருக்குலைந்துபோனது. .

கொடூற யுத்தம் 1953 ஜூலையில் நடந்த போர் நிறுத்த உடன்பாட்டினால் முடிவுக்கு வந்தது. அதன்பின் இரு நாடுகளுக்கும் இடையேயான சமாதான ஒப்பந்தம் இதுவரையில் கையெழுத்திடப்படவில்லை.

போருக்கு முன், அமெரிக்கா மற்றும் முன்னாள் சோவியத் யூனியனும் 38-வது இணைக்கோட்டை எல்லையாக நிர்ணயத்தார்கள். போர் முடிந்தபின், 38-வது இணைக்கோட்டிக்கு அருகே “இராணுவ வரையறை கோடு” (MDL) என்பது இரு கொரியாவிற்கும் இடையேயான புதிய எல்லையாக மாறியது. MDL-ஐ சுற்றி 4 கிலோமீட்டர் அளவில் உள்ள “படைகளற்ற மண்டலம்” (DMZ) எனும் இடைப்பட்ட பொதுபகுதி இரு கொரியாவையும் இன்றளவும் பிரித்து வைத்துள்ளது. DMZ-ன் இருபகுதிகளிலும் அதிஆயுதம் தாங்கிய படைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. தற்போது கொரியக்குடியரசில் சுமார் ஐந்து கோடி மக்களும், கொரிய ஜனநாயக மக்கள் குடியரசில் ஏறத்தாழ இரண்டரை கோடி மக்களும் வாழ்ந்துவருகிறார்கள்.

## 3. பொருளாதார வளர்ச்சி

1961-லிருந்து 1979-வரை தென் கொரிய அதிபராகயிருந்த "பார்க் சுங் ஹீ" தலைமையிலான அரசு நாடு பொருளாதார வளர்ச்சி அடைய ஏற்றுமதி சார்ந்த கொள்கையை பயன்படுத்தியது. துவண்டிருந்த பொருளாதரத்தை திருப்பிப்போட்ட அதிபர் பார்கின் இந்தக் கொள்கை "ஹான் நதியின் அற்புதம்" என்று புகழப்படுகிறது. பெருநிறுவனங்கள் சார்ந்த கொரிய பொருளாதார வளர்ச்சியின் தூண்டுகோலான அவரது ஐந்தாண்டு திட்டங்கள், வேலை வாய்ப்பை விரிவுபடுத்துவதிலும், நிறுவங்களுக்கிடையே ஆரோக்கியமான போட்டித்தன்மையை மேம்படுத்துவதற்கும் முக்கியத்துவம் குடுத்தது.

1960-களின் தொடக்கத்தில் உள்நாட்டு உற்பத்தி மூலம் வெளிநாட்டு இறக்குமதிகளை குறைக்கும் "இறக்குமதி பதிலீட்டு தொழில்மயமாக்கல் (ISI)" தவிர்க்கப்பட்டு ஏற்றுமதி மீது கவனம் செலுத்தியதால் கொரியா முன்னெப்பொழுதும் இல்லாவிதத்தில் பொருளாதார வளர்ச்சியை நோக்கி பயணம் செய்தது. ஏற்றுமதி சார்ந்த கொள்கையின் காரணமாக உழைப்பு செறிந்த, குறைவான மூலதனமும் சிறந்த ஒப்பீட்டு அனுகூலமும் உள்ள ஜவுளி மற்றும் ஆடை தயாரிப்பு போன்ற துறைகள் அரசின் ஊக்கம் பெற்று வளர்ச்சியடைந்தன.

1960-களின் பிற்பகுதியிலும் 1970-களிலும், குறைவான மூலதனம் கொண்டு நுகர்வோர் சார்ந்த துறைகளிலிலுருந்த கொரியாவின் கவனம் உயர்மதிப்பு கூட்டப்பட்ட கனரக மற்றும் ரசாயன தொழில்கள் பக்கம் திரும்பியது. எஃகு, கப்பல் கட்டுமானம், மின்னணு, இரசாயன உற்பத்தி, இரும்பு மற்றும் இரும்பில்லா மற்ற உலோகத்தொழில் தொடர்புடைய துறைகள் பொருளாதார வளர்ச்சிக்கான பந்தயந்தில் முக்கிய இடம் பிடித்தன.

1981 முதல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியின் (R&D) பக்கம் கொரியா திரும்பிய காரணத்தால், தொழில்நுட்பம் மற்றும் மின்னணு பொருட்களின் ஏற்றுமதி 1980-களின் பிற்பகுதியில் அதிகரித்தது. சாம்சுங், ஹ்யுன்தேய், எல்.ஜி போன்ற நிறுவனங்கள் 1990-களின் தொடக்கம்வரை ஏற்றுமதி சார்ந்த தொழில் கொள்கையை பயன்படுத்தி உலகில் முக்கியத்துவம் வாய்ந்த பெருநிறுவனங்களாக வளர்ச்சி பெற்றன. அதன்பின்னர் இந்த பெருநிறுவங்கள் அனைத்தும் மூலதனம் அதிகம் தேவைப்படும் கனரக மற்றும் ரசாயன

தொழில்துறைகளில் அரசு ஆதரவுடன் முதலீடு செய்ய ஆரம்பித்தன. அதே சமயத்தில் மற்ற தொழில்துறைகள் மற்றும் சமூக உள்கட்டமைப்புகளை மேம்படுத்த அரசு கவனம் செலுத்தியது.

கிராமப்புற மக்களை ஒன்றுபடுத்தி கிராமங்களை மேம்படுத்தவும், வேளாண்மை துறையை நவீனப்படுத்தவும் "சேமாவுல்" என்ற திட்டம் 1970-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. சேமாவுல் என்றால் "புதிய கிராமம்" என்று பொருள். இந்த புதிய திட்டத்தின் வாயிலாக கிராமங்களின் அபிவிருத்தி மற்றும் விவசாயிகளின் வாழ்க்கை நிலைமையையும் சிறந்தளவில் மேம்படுத்தப்பட்டது. அதன் பின்னர் தொழிற்சாலைகள் மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு உதவும் வகையிலும் இந்த திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. சேமாவுல் இயக்கத்தின் கொள்கைகளை தங்கள் நாடுகளின் வளர்ச்சிக்காக இன்றும் பல வளரும் நாடுகள் பயன்படுத்துகிறார்கள். சேமாவுல் திட்டத்தின் அறிவாற்றல் மற்றும் நிபுணத்துவத்தை தென்கொரியா மற்ற நாடுகளுடன் பெரும்தன்மையுடன் பகிர்ந்து கொள்கிறது.

தென் கொரியவின் வளர்ச்சி ஏற்றுமதி சார்ந்த பொருளாதார யுக்தியின் வெற்றியை நிரூபித்துள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் வெளிநாடுகளிடம் உதவி வாங்கிய நாடாக இருந்து ஒரே தலைமுறையில் மற்ற நாடுகளுக்கு நிதி வழங்கும் நாடாக மாறியது உலகிலேயே கொரியா மட்டும்தான். 2014-ன் புள்ளிவிவரங்களின்படி, உலகளவில் தென் கொரியா ஏற்றுமதியில் ஐந்தாவது பெரியநாடாகவும், இறக்குமதியில் ஏழாவது பெரியநாடாகவும் இருக்கிறது.

## எந்த காரணிகளால் தென் கொரியாவின் பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டது?

வலுவான தலைவர்கள், நன்கு பயிற்சி பெற்ற அரசு அதிகாரிகள், திறமையான தொழிலதிபர்கள் மற்றும் செயல் நோக்கமுள்ள தொழிலாளர்களின் கூட்டுமுயற்சியின் பலன்தான் தென் கொரிய பொருளாதார வளர்ச்சியின் வெற்றி. அரசு அளித்த சலுகைகளை சாதிக்க வேண்டும் என்ற கனவுடன் இருந்த தொழில் முனைவோர்கள் ஏற்றுமதியை அதிகரிக்கவும், புதிய தொழிற்சாலைகளை உருவாக்கவும் பயன்படுத்திக்கொண்டனர்.

கன்பூசியச நெறியினை பின்பற்றிய தென்கொரியர்கள் கல்வியின் முக்கியத்துவம், மற்றவர்களுடன் இயந்து வாழும் வாழ்க்கைமுறை, பெற்றோர் மற்றும் முன்னோர்களை மதிக்கும் தன்மைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தனர். தொழில்மயமாக்கலில் தென் கொரியா கால் எடுத்து வைக்கும்முன்பே, கிட்டத்தட்ட அனைத்து கொரிய தொழிலாளர்களும் படிப்பறிவு மற்றும் புதிய திறன்களை எளிதில் கற்றுகொள்ளும் திறமையும் பெற்றிருந்தனர்.

அதே நேரத்தில், மற்ற நாடுகளின் மேம்பட்ட நிறுவனங்கள் மற்றும் அதன் தொழில்நுட்பங்களை தன்னுள் வாங்கிக்கொண்டு கட்டற்ற பொருளாதாரக் கொள்கையின் பாதையில் கொரியா முன்னேறியது. வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் அதிக உள்நாட்டு சேமிப்பு விகிதம் போன்றவற்றால் சேர்ந்த செல்வங்களைக்கொண்டு அதிக முதலீடு தேவைப்பட்ட கனரக தொழில்துறைகள் கொரியாவில் உருவாக்கப்பட்டன. மேலும் வெளிநாடுகளில் வாழ்ந்த தென் கொரியத் தொழிலாளர்கள் அனுப்பிய பணமும் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கு சிறந்த பங்களிப்பாய் அமைந்தது. உதாரணமாக, தென் கொரியாவை சேர்ந்த எண்ணற்ற சுரங்கத் தொழிலாளர்கள் மற்றும் செவிலியர்கள் பணமீட்ட 1965-களில் இருந்து 1970-களின் கடைசிவரை மேற்கு ஜெர்மனியில் பணிபுரிந்தனர்.

## 4. மலர்ந்த ஜனநாயகம்

வெளிப்படையான ஜனநாயக ஆட்சிமுறையை கொண்டுவரும் முன்னெடுப்பில் தென் கொரிய மக்கள் மிகுந்த முனைப்பில் இருந்தனர். 1960-ம் ஆண்டுதொட்டு ஜனாதிபதி பார்க் சுங் ஹீ மற்றும் பல முன்னாள் இராணுவ தளபதிகளால் நாடு ஆளப்பட்டுவந்தாலும் 1993-முதல் மக்களால் தேர்தல்மூலம் ஒளிவுமறைவின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களால் நாடு ஆளப்படுகிறது.

அரசாங்கம் தலையிடும் என்ற அச்சமில்லா இன்றைய தென் கொரியாவின் செய்தித்தாள்கள் மற்றும் தொலைக்காட்சி நிலையங்கள் தங்கள் கருத்துக்களை சுதந்திரமாக வெளியிடுகின்றன. இணைய மற்றும் சமூக வலைத்தளங்களின் சேவை கொரியா முழுவதும் நீக்கமற எங்கும் நிறைந்துள்ளது. உடனடி செய்தி பரிமாற்றம் மற்றும் ஏனைய தகவல் தொடர்புகள் அனைத்தும் ஒவ்வொரு தென் கொரியர்கள் (குறிப்பாக இளைஞர்கள்) விரல் நுனியிலும் பொதிந்து இருக்கிறது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்ற செயல்நோக்கில் ஜனநாயகம் அடக்குமுறை செய்யப்பட்டு தென் கொரியப் பொருளாதாரம் முன்னேறியது. இந்த வளர்ச்சியின் வெற்றி கொஞ்சம் கொஞ்சமாக ஜனநாயக மாற்றம் உருவாக தூண்டுதலாய் இருந்து, புதிய சுதந்திர ஜனநாயக சமூகமாக மாறஉதவியது. இருப்பினும், இந்த வேகமான பொருளாதார வளர்ச்சி, சமூக மற்றும் பொருளாதார சமத்துவமின்மையை கொண்டுவந்தது. பாதிப்படைந்தோர்களின் தாகம் சிறந்த ஜனநாயகத்தன்மையை நிலைநிறுத்தும் ஊக்கியாக செயல்பட்டு ஜனநாயக மலர்ச்சி ஏற்றப்பட்டது.

## 5. உலக அரங்கில் தென் கொரியா

வெளியுலகத்துடன் பல நூறு ஆண்டுகளாக தொடர்பற்று இருந்த காரணத்தால் கொரியாவை “துறவி இராஜ்ஜியம்” என்பார்கள். இருப்பினும், வர்த்தகம் மற்றும் புலம்பெயர்வு ஏற்பட்டிருப்பதை தீபகற்பவரலாற்றை பார்க்கும்போது அறியமுடிகிறது.

பழங்கால கலைப்படைப்புகள் மற்றும் பண்டைய வரலாற்று பதிவுகளைப் பார்க்கும்போது, பெரிய அளவில் பல நாடுகளுடன் நடந்த கலாச்சார பரிவர்த்தனை நிகழ்வுகளை காணமுடிகிறது. சீனாவில் இருந்த பழங்குடியின மக்களின் கொரியஇடம்பெயர்வு, அரபு வியாபாரிகள் குடியமர்வு மற்றும் தென்கிழக்கு ஆசியர்களின் கொரியவருகைகளை உதாரணமாக கூறலாம். கொரியதீபகற்பத்தின் தென்கிழக்கு மூலையில் இருந்த சில்லா அரசின் தலைநகராக இருந்த கியொங்ஜூ-தான் ஆசிய கண்டத்திலிருந்து ஐரோப்பா வரை நீளும் பட்டு வர்த்தகபாதையின் கிழக்கு முனையம் என்பது குறிப்பிடத்தக்கது.

சமீப காலங்களில், உலக சமூகத்தில் தன்னை ஒரு முக்கிய இடத்தில் கொரியா நிலைநிறுத்தியுள்ள காரனத்தால் உலகமக்கள் கொரியர்களின் படைப்புகள் மற்றும் கலாச்சாரத்தை எளிதில் அறிந்துகொள்கிறார்கள். எடுத்துக்காட்டாக ஒரு சராசரி தென் கொரிய மாணவர்/மாணவி, திறன்பேசிகள் துணைகொண்டு தன்னை வெளிஉலக சமூகத்துடன் எளிதில் இணைத்து கொள்ளவும், உலகத்தை காணும் தங்கள் கனவுகளை பூர்த்திசெய்துகொள்ளவும், ஆங்கிலம் அல்லது மற்ற வெளிநாட்டு மொழிகளை கற்றுக்கொள்ளவும் பயன்படுத்துகிறார்கள்.

இன்றைய மின்னணு தகவல்தொடர்புகளை உலகை இணைக்கும் நவீனப் பட்டுப்பாதைகள் என்றே கூறலாம். இணைய தொழில்நுட்பங்களில் தென் கொரியா உலகின் மிக சிறந்த நாடாக முன்னேறியுள்ளது. தகவல்தொடர்பின் ஆற்றலை கொரிய நாட்டின் மூலைமுடுக்குகளில் கூட காணமுடிகிறது. பல தலைமுறைகளாகப் பேணப்பட்டு தொடர்ந்துவந்த கொரிய மக்களின் சிந்தனைகள், அறிவாற்றல் மற்றும் அனுபவங்களை நவீன தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலமாக உலகமக்களுடன் பகிர்வதால் கொரிய கலாச்சாரம் இன்னும் செழுமையடைந்துள்ளது.

காலம்காலமாக சர்வதேச தொடர்புகளின் ஒரு முக்கிய கூறாக இருப்பது கலாச்சாரப் பரிமாற்றம். தொலைத்தொடர்பு வசதிகள் மூலம் சுருங்கிபோன இன்றைய நவீன உலகத்திற்கும் இது பொருந்தும். "கொரிய அலை" (ஹல்யூ) என்று சொல்லப்படும் கொரிய பாப் இசை, திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நாடகங்கள் உலகம் முழுவதும் உள்ள எண்ணற்ற மக்களை தன்பால் ஈர்த்துள்ளது. அதுபோல கொரியாவும் உலகெங்கிலும் உள்ள பல்வேறு கலாச்சார கூறுகளை ரசித்து தன்னுள் ஏற்றுக்கொண்டுள்ளது.

## கொரியர்களின் தினசரி வாழ்க்கை

பெரும்பாலான கொரியர்கள் நவீன ஆடைகளை விரும்பி அணிகின்றனர். திருமணம் மற்றும் பாரம்பரிய விடுமுறை போன்ற விசேச சந்தர்ப்பங்களில் ஹன்புக் என்று அழைக்கப்படும் பாரம்பரிய கொரிய ஆடைகளை அணிகிறார்கள். குறுகிய மேலுறை மற்றும் நீண்ட உடையை பெண்கள் தங்கள் ஹன்புக்காகவும், மேலுறை மற்றும் கணுக்காலுடன் முடியும் தளர்வான காற்சட்டையை ஆண்கள் தங்கள் ஹன்புக்காகவும் அணிகிறார்கள். சாதம், சவடிசாறு மற்றும் கிம்ஜி-யை (புளிக்கவைத்து பதப்படுத்தப்பட்ட முட்டைக்கோஸ்) கொரியர்களின் அடிப்படை உணவாகக் கூறலாம், ஒரு ஜோடி குச்சிகளினால் தங்கள் உணவை உண்கிறார்கள். ஒன்தொல் என்னும் பாரம்பரிய தரையை சூடாக்கும் முறையை

இன்றும் தங்கள் வீடுகளில் குளிர்காலத்தில் பயன்படுத்துகிறார்கள். பெருகிவரும் நகரமயமாக்களின் காரணமாக, பெரும்பாலான கொரியர்கள் அடுக்குமாடி கட்டிடவளாகங்களில் வாழ்ந்து வருகிறார்கள். கொரியாவின் பாரம்பரிய தற்காப்பு கலையான தேக்குவான்தோ இன்றும் பிரபலமாக உள்ளது, இப்போது தேக்குவான்தோ சர்வதேசஅளவில் புகழ்பெற்ற ஒரு விளையாட்டாகவும் உள்ளது.

The Academy of Korean Studies
Center for International Affairs, Division of Understanding Korea Project

108º Research Complex(Munhyeonggwan), The Academy of Korean Studies, 323 Haogae-ro, Bundang-gu, Seongnam-si, Gyeonggi-do, 13455, Republic of Korea

- Tel. (82) 31-709-6590

- Fax. (82) 31-709-6572

http://www.ikorea.ac.kr/